
# ஆட்டினங்கள்

28895



அறிவொளி தொடர்கல்வி இயக்கம்
சேலம் / நாமக்கல் மாவட்டம்

33211

# ஆட்டினங்கள்

நூலகத்திற்கு அன்பளிப்பு
டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம்
நாள்:.........
சென்னை-90.

டாக்டர் பெரு. மதியழகன்,
M.V.Sc., M.A., Ph.D., D.J., D.P.T., P.G.D.E.T.
துணைப் பேராசிரியர்
கால்நடை விரிவாக்கக் கல்வித்துறை
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம்
நாமக்கல் - 637 001.

பாவை பப்ளிகேஷன்ஸ்
Prop : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்
142, ஜானிஜான்கான் ரோடு,
சென்னை - 14.

ஆட்டினங்கள்

ஆசிரியர் : டாக்டர் பெரு. மதியழகன்

முதல் பதிப்பு : அக்டோபர், 1997

© பதிப்பகத்தாருக்கு

விலை : ரூ. 10-00

ஒளி அச்சு : ஹைடெக் கிராபிக்ஸ், ✆ : 642 42 48

அச்சிட்டோர் : பிக்டாட் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 10.
போன் : 6426345

க. முத்துசாமி, இ.ஆ.ப.,
தலைவர், தொடர்கல்வி இயக்கம்
மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம்.

# அணிந்துரை

மக்கள் வாழ்வாங்கு வாழ வேண்டும். அதற்கு அறிவு தேவை. அந்த அறிவைப் பெறுவதற்கு கல்வி அவசியம். அப்படிப்பட்ட கல்வியைப் படித்தும் பெறலாம், படிக்காதவர்களாய் இருந்தால் மற்றவர்பால் கேட்டும் பெறலாம். ஏற்கெனவே அறிவொளியில் சேராதவர்களுக்கு தொடர்கல்வியில் சேர வாய்ப்புகள் உண்டு.

அறிவொளியின் மூலம் அடிப்படை எழுத்தறிவு பெற்றவர்களுக்குத் தாம் கற்றதை நிலை நிறுத்தவும், கற்றதை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் வகையில் ஒவ்வொரு அறிவொளி நூலகங்களுக்கும் சுமார் 230 தலைப்புகளில் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக வாழ்க்கைக்கேற்ற மேலும் பல நூல்கள் உங்கள் கைகளில் த்வழ்கின்றன. உங்களின் அன்றாட வாழ்க்கையில் வளம் காண அறிவொளி தொடர்கல்வி இயக்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண்

க. முத்துசாமி

# பதிப்புரை

இந்நூல் டாக்டர் பெரு. மதியழகன் அவர்களால் மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் எழுதப்பட்டுள்ளது. ஆட்டினங்கள், ஆட்டுதீவனம், பண்ணை அமைக்க ஆடுவாங்குவது எப்படி?, ஆட்டுப் பண்ணையில் இனப்பெருக்கம், ஆட்டுத் தோலும் கம்பளமும், ஆடுகளைத் தாக்கும் நுண்ணுயிரி நோய்கள், ஆடுகளைத் தாக்கும் நச்சுயிரி நோய்கள் என்று வகைப்படுத்தி ஆடு வளர்ப்பவர்களும், வாங்குபவர்களும், சாதாரண மக்களும் ஆடுகளைப் பற்றி ஆட்டின் பயன்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் ஏழு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் அறிவொளி கல்விபெறும் பாமரமக்களும் படித்துப்பயன் பெற்று சுய தொழில் செய்ய வழி காட்டும் என்கின்ற நோக்கத்தில் எமது நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் இந்நூலை வெளியிடுகிறது.

**பதிப்பகத்தார்**


# ஆட்டினங்கள்

செம்மறி ஆடுகள் இரண்டு வகையானவை. 1. கம்பள ஆடுகள் 2. இறைச்சி ஆடுகள். இவ்விரு வகையில் சில கொம்புள்ளவை. சில கொம்பற்றவை.

**1. கம்பள ஆடுகள் (WOOL TYPE)**

1. கோயம்புத்தூர் குறும்பை, 2. நீலகிரி, 3. பிகேனரி, 4. லோகி போன்றவை கொம்பற்றவை, 5. திருச்சிக் கருங்குறும்பை, 6. கோலார், 7. டெக்கானி, 8. பெல்லாரி, 9. கிசார்டேல் போன்றவை கொம்புள்ளவை.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தகுந்த தரம் வாய்ந்த கம்பள உரோமங்களை வட இந்தியச் சமவெளியில் வாழும் பெரும்பாலான ஆடுகள் உற்பத்தி செய்கின்றன. இராஜஸ்தான், வடகுஜராத், கட்ச்வளைகுடா, சௌராஷ்ட்ரா பகுதிகளில் உள்ள ஆடுகள் விரிப்புகளுக்கான கம்பள உரோமங்களை கொடுக்கின்றன.



இந்தியாவில்
கம்பள இன ஆடுகள்
காணப்படும் இடங்கள்
இராஜஸ்தான்
கட்ச் வளைகுடா
வட
குஜராத்
ஜான்சி
மகாராஷ்ட்ரா
டெக்கான்
பெல்லாரி
கோலார்
மாண்டியா
நெல்லூர்
சென்னை
தருமபுரி
சேலம்
நீலகிரி
திருச்சி
கோவை
மதுரை

தமிழ்நாட்டில் நீலகிரி, கோவை, திருச்சி, சேலம், மதுரை, தென்னாற்காடு, தருமபுரி மாவட்டங்களில் கம்பள ஆடுகள் காணப் படுகின்றன. இவற்றில் நீலகிரி ஆடுகள் நேர்த்தியான கம்பள உரோமங்களைக் கொடுக்கின்றன. இந்தியாவில் கம்பளி உற்பத்தி ஆண்டுக்கு 34.5 மில்லியின் கிலோ ஆகும்.

## 2. இறைச்சி ஆடுகள் (MUTTON TYPE)

1. மேச்சேரி, 2. மாண்டியா போன்றவை கொம்பில்லாதவை. 3. இராமநாதபுரம் வெள்ளை, 4. கீழ்க்கரைசல், 5. சென்னை சிவப்பு, 6. வேம்பூர், 7. நெல்லூர் போன்றவை கொம்புள்ளவை.

தமிழ்நாட்டு ஆடுகள் பெரும்பாலும் இறைச்சி இனத்தைச் சேர்ந்தவை. இவை நீளமான கால்களையும், மெல்லிய உடலமைப்பையும், உரோமங்கள் கொண்ட தோலையும் உடையவை. பொதுவாக இறைச்சி ஆடுகளுக்குத் தொண்டையில் குஞ்சங்கள் போன்ற இரு தாடிகள் தொங்கும்


85%


15%

(TASSELS). இந்த ஆடுகளின் தோல், முரடான ஊரோமங்களைக் கொண்டவை.

தமிழகத்தில் 15 விழுக்காடு கம்பளி இன ஆடுகளும், 85 விழுக்காடு இறைச்சி இன ஆடுகளும் இருக்கின்றன. இந்தியாவில் 4 கோடி ஆடுகள் உள்ளன. இது உலக நாடுகளில் 5 வது இடம்.

## 3. தமிழ்நாட்டு ஆட்டினங்கள்

### அ. மேச்சேரி (MECHERI)

இவை இறைச்சிக்காக வளர்க்கப் படுகின்றன சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மேச்சேரி இதன் தாயகம். சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தருமபுரி மாவட்டத்தில் பரவலாகவும் இவ்வின ஆடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. இவ்வினம் பெரியார் மாவட்டத்தில் உள்ள பவானி பகுதியில் "மயிலம்பாடி" என்றும் "துவாரன் செம்புலி" என்றும் அழைக்கப்படுகிறது.

மேச்சேரி இனத்தின் தலை முதுகு ஆகிய பகுதிகளில் கரும்பழுப்பு நிறம் படிந்து காணப்படும். ஆண், பெண் இரண்டும் கொம்பற்றவை. மயிலம்பாடி மேச்சேரியைவிட சற்று கரும்பழுப்பு நிறமாக இருக்கும். மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்திலும் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சின்ன சேலம் ஆட்டுப்பண்ணையிலும், தருமபுரி மாவட்ட ஒசூரில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், நாமக்கல் கால்நடை மருத்துவக்கல்லூரி பண்ணையிலும் மேச்சேரி இனம் வளர்க்கப்படுகிறது. கிடாவின் எடை 30-40 கிலோ வரையும், பெட்டையின் எடை 25-30 கிலோ வரையும் இருக்கும்.

## ஆ. இராமநாதபுரம் (RAMANATHAPURAM)

இவ்வினம் இறைச்சிக்காக வளர்க்கப் படுகிறது. இதை கீழ்க்கரைசல், கீழ்க்கரவை இராமநாதபுரம் கருவை, ஆதிக்கரைசல் என்றும் அழைக்கின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, முதுகுளத்தூர், விருதுநகர் மாவட்டத்தில்



மேச்சேரி ஆண் ஆடு



மேச்சேரி பெண் ஆடு

அருப்புக்கோட்டை, மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், உசிலம்பட்டி, நிலக்கோட்டை முதலிய இடங்களில் இவ்வகை ஆடுகள் காணப்படுகின்றன. இதன் உடல் கரும்பழுப்பு நிறமாகவும், உடலின் கீழ்பகுதியில் கறுப்பு நிறமாகவும் இருக்கும். கண்களில் உட்புறவிளிம்பிலிருந்து தலைவரை தலைகீழ் "U" வடிவத்திலும் கறுப்பு நிறம் காணப்படும். கன்னத்திலிருந்து தொடை வரை மார்பு, வயிறு ஆகிய இடங்களில் கறுப்பு நிறம் காணப்படும். கிடாக்களுக்கு கொம்புகள் உண்டு பெட்டைகளுக்கு கொம்புகள் இல்லை. இவை நடுத்தர உருவமுள்ளவை. குட்டையான ஆடுகளும் உண்டு. விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர், இராமநாதபுரம் மாவட்டத்தில் செட்டிநாடு, நெல்லை மாவட்டத்தில் அபிசேகப்பட்டி, புதுக்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் இவ்வின ஆடுகள் வளர்க்கப் படுகின்றன. கிடாவின் எடை 25-40 கிலோ வரையும், பெட்டையின் எடை 15-30 கிலோ வரையும் இருக்கும்.



இராமநாதபுரம்
வெள்ளை - ஆண் ஆடு



இராமநாதபுரம்
வெள்ளை- பெண் ஆடு

## இ. இராமநாதபுரம் வெள்ளை (RAMANATHAPURAM WHITE)

இது இராமநாதபுரத்தில் உள்ள மற்றொரு இனமாகும். பெரும்பாலானவை வெள்ளை நிறமுடையவை. சில ஆடுகள் காவி அல்லது கறுப்பு நிறத்தில் காணப்படும். கழுத்து முதுகு பாகங்களில் கறுப்பு, வெள்ளைப் புள்ளிகள் இருக்கும். கிடாவிற்கு கொம்பு உண்டு. பெட்டைக்கு கொம்பில்லை. சாத்தூர் ஆட்டுப்பண்ணையில் இவ்வினம் வளர்க்கப்படுகிறது. கிடாவின் எடை 25-35 கிலோ வரையும், பெட்டையின் எடை 15-25 கிலோ வரையும் இருக்கும்.

## ஈ. சென்னை சிவப்பு (CHENNAI RED)

இந்த இனம் சென்னை, செங்கை மாவட்டத்தில் காணப்படுகிறது. இதனுடைய நிறம் பழுப்பு அல்லது கரும் பழுப்பாக இருக்கும் சில ஆடுகளில் முன்நெற்றி, அடிவயிறு, தொண்டைப்பகுதிகளில் வெள்ளை நிறம் காணப்படும். கிடாக்களுக்குக்



சென்னை சிவப்பு
ஆண் ஆடு



சென்னை
சிவப்பு பெண்
ஆடு

வேம்பூர் ஆண் ஆடு






வேம்பூர்
பெண் ஆடு

கொம்புண்டு பெட்டைக்குக் கொம்பில்லை. காட்டுப்பாக்கம் பண்ணையில் இவ்வினம் வளர்க்கப்படுகிறது. கிடாவின் எடை 40-45 கிலோ வரையும் பெட்டையின் எடை 20-கிலோ வரையும் இருக்கும்.

### உ. வேம்பூர் (VEMBOR)

நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் பகுதியில் உள்ள வேம்பூர் இதன் பூர்வீகம். இதை "கரந்தை" என்றும் அழைப்பர். இவற்றில் இரண்டு வகை உண்டு. 1. வெள்ளை நிறமாகவும் பழுப்பு அல்லது மாநிறத்துடன் காணப்படும் இதைப் "போர் வெள்ளை" அல்லது "கண்ணாடி வெள்ளை" என்றும் அழைப்பர், 2. உடல் முழுவதும் கறுப்பு நிறம் அங்கங்கே திட்டுதிட்டாகக் காணப்படும். இதைக் "கருவெள்ளை" என்பர். இவை தமிழக இன ஆடுகளிலேயே உயரமானவை. கிடாக்கள் கொம்புள்ளவை. பெட்டைகள் கொம்பற்றவை. கிடாவின் எடை 40-45 கிலோ வரையும் பெட்டையின் எடை 25-35 கிலோ வரையும் இருக்கும்.



திருச்சி கறுப்பு ஆண் ஆடு

திருச்சி கறுப்பு பெண் ஆடு



## ஊ. திருச்சி கறுப்பு (TRICHY BLACK)

இதை "கருங்குறும்பை" என்றும் கூறுவர், கடினமான கம்பள உரோமங்களை கொண்டவை. தென்னாற்காட்டிலுள்ள கள்ளகுறிச்சி, சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர், வீரகனூர் பகுதிகள், திருச்சி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், அரியலூர். தருமபுரி, கிருட்டிணகிரி மற்றும் வட ஆற்காடு மாவட்டத்தில் ஜோலார்பேட்டை பகுதிகளிலும் இவ்வினம் காணப்படுகிறது. திருச்சி கறுப்பு என்பதற்கு ஏற்ப கறுப்பு நிறமும், நீளமான கடின உரோமங்களையும் கொண்டவை. கிடாக் களுக்கு கொம்புண்டு. பெட்டைகளுக்குக் கொம்பில்லை. கிட வின் எடை 25-35 கிலோ வரையும் பெட்டையின் எடை 18-22 கிலோ வரையும் இருக்கும். இதில் கிடைக்கும் உரோமங்கள் கம்பளம் நெய்யப் பயன்படுகிறது. சின்னசேலம் ஆட்டுப்பண்ணையில் இவ்வினம் பராமரிக்கப்படுகிறது.

## எ. கோயம்புத்தூர் (COIMBATORE)

கோயம்புத்தூர் குறும்பை அல்லது சூலூர் இனம் என்றும் அழைக்கப்படுகிறது. சூலூர், பெரியகுளம், நிலக்கோட்டை, உத்தமபாளையம் மற்றும் சேலம் தென்னாற்காடு மாவட்டங்களிலும் காணப்படுகிறது. இவை வெண்மை நிறத்திலும் கருமை அல்லது மாநிறம் கொண்ட தலையும், கழுத்தும் பெற்றிருக்கும். கடின உரோமங்களைக் கொண்டவை. மிக்க கொழுப்புள்ள இறைச்சி இனமாகும். பாரசீக இரத்தம் இவ்வினத்தில் கலந்திருப்பதாகக் கூறுவர். இவ்வினத்தில் பெட்டை, கிடா இரண்டிற்கும் கொம்பில்லை. கிடாவின் எடை 25-கிலோ வரையும். பெட்டையின் எடை 20-25 கிலோ வரையும் இருக்கும். ஆண்டிற்கு 1/2 கிலோ முதல் 3/4 கிலோ வரை உரோமங்கள் கொடுக்கின்றன.

## ஏ. நீலகிரி (NILGIRIS)

மெல்லிய கம்பளி வகை ஆடுகள் நீலகிரி மாவட்டத்தில் காணப்படுகின்றன. இவை

வெள்ளை நிறம் உடையவை. சில ஆடுகளில் வெண்மை நிறத்தில் காவிநிறப் புள்ளிகள் அல்லது பட்டைகள் முகத்திலும் உடலிலும் காணப்படும். கிடா, பெட்டை இரண்டிற்கும் கொம்பில்லை. ஆண்டிக்கு 3/4 கிலோ கம்பளி கொடுக்க வல்லவை, கிடா எடை 25-40 கிலோ வரையும், பெட்டையின் எடை 20-30 கிலோ வரையும் இருக்கும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள சாந்தினல்லா ஆட்டுப் பண்ணையில் வளர்க்கப்படுகிறது.

## 4. கலப்பினம்

### அ. சாண்டினோ (SANDINO)

நீலகிரி இனத்தை மெரினோ என்ற அயல்நாட்டு இனத்துடன் கலப்பினப் பெருக்கம் செய்து 15 ஆண்டு கால ஆராய்ச்சியின் மூலம் சாந்திநல்லா ஆட்டுப்பண்ணையில் உருவாக்கப்பட்ட இனமே சாண்டினோவாகும். நீலகிரி இனத்துடன் இதை ஒப்பிடும் போது கம்பள உற்பத்தி நீலகிரி இனத்தை விட மூன்று



செம்மறி ஆடு (கிடா)



கம்பளி இன ஆடுகள்



மடங்குக்கும் அதிகமாக உள்ளது. கம்பளத் தன்மைகள், இனவிருத்தித் தன்மைகள், வாழும்தினம் முதலியவை மிகுதியாக உள்ளன. நீலகிரி மாவட்டத்தின் தட்பவெப்பநிலைக்கு ஏற்றதாகவும், அதிக இலாபம் தரத்தக்கதாகவும் இருக்கின்றன. நீலகிரி போன்ற குளிர்ப் பிரதேசங்களில் மட்டும் வளர்க்க ஏற்றவை. ஆண்டிற்கு 3 கிலோ கம்பளி கிடைக்கும்.

## ஆ. இறைச்சி கலப்பினம்

டார்செட், சபேக் போன்ற மேல்நாட்டு இறைச்சி இனங்கள் 60 கிலோ வரை எடையுள்ளவை. இவற்றை நம் நாட்டு இனத்தோடு கலப்பினப் பெருக்கம் செய்து புதிய இனத்தை உருவாக்கும் ஆராய்ச்சி செங்கற்பட்டு மாவட்டத்தில் காட்டுப் பாக்கத்திலும், சேலம் மாவட்டத்தில் பொட்டனேரியிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிய கலப்பினங்கள் நம் நாட்டு இனங்களை விட 5 முதல் 10 கிலோ வரை கூடுதலாக இறைச்சியை உற்பத்தி செய்கின்றன.

சேலம் / நாமக்கல் மாவட்ட தொடர்கல்வி இயக்கம்,
சேலம்.

## தொடர் கல்வி இயக்க முழக்கங்கள்

1) மக்கள் வெற்றி பெற்றார்கள்
நம் மாவட்டம் முழு எழுத்தறிவு பெற்றது.
2) கற்றுக் கொண்ட கற்போரே
காலம் உங்கள் கையில்.
3) கற்றுக் கொடுத்த தொண்டரே
காலம் உங்களை மறக்காது.
4) கற்காதவரும் கற்போராய்
தொடர் கல்வியில் சேரலாம்.
5) தொண்டர்களும் கற்போர்களும்தான்
தொடர் கல்வியின் இரு கண்கள்.
6) வட்ட வழிகாட்டி
வாழ்க்கைக்கு வழிகாட்டி.
7) வெல்லட்டும் வெல்லட்டும்
தொடர்கல்வி இயக்கம் வெல்லட்டும்.
8) வளர்கல்வி இயக்கம்
வளமைக்கு உதவும் இயக்கம்.
9) செய்தித்தாளைப் படித்திடுவோம்
உலகை நாமும் அறிந்திடுவோம்.
10) நூலகங்கள் துவங்குவதற்கு
நூல்கள் நிறைய வேண்டும்.